# தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மறுகுடியமர்வு பகுதியான பெரும்பாக்கம் குறித்த மதிப்பீடு

சென்னை மாநகரத்திலிருந்து அரசாங்கத்தால் அப்புறப்படுத்தப்படவிருக்கும் 20,000-க்கும் மேற்பட்ட குடும்பங்களை நகருக்கு அப்பால் மறுகுடியமர்வு செய்வதற்கு, ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புதுப்பித்தல் திட்டத்தினால் (JNNURM) உருவாக்கப்பட்டதே, காஞ்சிபுரம் மாவட்டத்தில் அமைந்துள்ள பெரும்பாக்கம் - தமிழ்நாடு குடிசைமாற்று வாரியத்தின் மறுகுடியமர்வு பகுதி. அனுமதி வழங்கப்பட்டு கட்டுமானம் துவக்கப்பட்ட 20,000 குடியிருப்புகளில் 3,936 குடியுருப்புகள் நிறைவடைந்துள்ளன. தற்போது தோராயமாக 3,000 குடும்பங்கள் இந்த மறுகுடியமர்வு பகுதியில் குடியமர்த்தப்பட்டுள்ளனர். இம்மக்கள் பெரும்பாக்கம் கட்டுமான பணிநேரத்தில் அப்பகுதியிலிருந்து அகற்றப்பட்டு தற்காலிகமாக செம்மஞ்சேரியில் மறுகுடியமர்வு பகுதியில் குடியமர்த்தப்பட்டவர்கள். இம்மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள வசதிகள் மற்றும் சேவைகள் குறித்த ஆரம்பகட்ட விசாரணை மேற்கொள்ள சிட்டீசன் கன்சியூமர் அண்ட் சிவிக் ஆக்சன் குரூப் சார்ந்த டிரான்ஸ்பெரண்ட் சிட்டீஸ் நெட்வொர்க் (TCN @ CAG) குழு கடந்த 16-10-15 அன்று பெரும்பாக்கம் மறுகுடியமர்வு பகுதியை பார்வையிட்டது. TCN @ CAG குழுவின் நேரடி பார்வையிடுதல் மற்றும் அங்கு வசிப்பவர்களிடம் மேற்கொண்ட பேட்டியின் மூலமும் சேகரித்த விபரங்கள் பின்வருமாறு:

**கட்டமைப்பின் குறைப்பாடுகள்:**

இந்த குடியிருப்புகள் அடித்தளம் + ஏழு அடுக்குகளுடன் (G+7), ஒரு தளத்திற்கு 24 வீடுகள் என மொத்தம் 192 வீடுகளாக ஒரு தொகுப்பில் மட்டும் கட்டப்பட்டுள்ளது. ஒவ்வொரு தொகுப்பிலும் 2 மின்தூக்கி வசதிகள் இருப்பினும், ஒன்றை மட்டும் தான் பயன்படுத்த வேண்டும் என்று நிர்பந்திக்கப்படுவதாக குடியிருப்புவாசிகள் கூறுகின்றனர். ஒரு மின்தூக்கி பழுதடைந்தால் மற்றொன்றை பயன்படுத்தலாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் அவர்கள் கூறுகின்றனர். மேலும் பகல் நேரத்தில் வராந்தா பகுதி இருள் சூழ்ந்து காற்றோட்ட வசதி குறைவாக காணப்படுகிறது. தீவிபத்து போன்ற அசம்பாவித சமயங்களில் மக்கள் கூட்டம் கூட்டமாக படிக்கட்டுகளில் சிக்கி உயிரிழக்கும் நிலை ஏற்படலாம் - ஏனெனில் சுமார் 750 மக்கள் வாழபோகும் ஒரு தொகுப்பில் வெறும் 2 குறுகிய படிக்கட்டுவழிகள் மற்றும் ஒரு மின்தூக்கி மட்டுமே அமைக்கப்பட்டுள்ளது.

**சாலைகள்:**

சாலைகள் பழுதடைந்தும் மழை நீர் ஆங்காங்கே தேக்கம் அடைந்தும் காணப்படுகிறது. சில தொகுப்புகளில் கழிவுநீர் வடிகால்கள் மூடப்படாமல் இருப்பதால் சாலையை பயன்படுத்துவோருக்கு பெரும் ஆபத்தை ஏற்படுத்தும் நிலை உள்ளது

**குடிநீர் மற்றும் சுகாதாரம்:**

ஒவ்வொரு வீட்டிற்கும் மெட்ரோ வாட்டர் இணைப்புடன் பொருத்தப்பட்டுள்ளதோடு நாள்முழுவதும் நீர்வசதி வழங்கப்படுகிறது. இணைப்பு வழங்கப்பட்டு தற்போது நாள்தோறும் குடிநீர் வழங்கப்படுவதாக குடியிருப்புவாசிகள் தெரிவித்துள்ளனர். ஆயினும் இந்த தண்ணீர் பெரும்பாலும் குளிப்பதுற்கும், துவைபதற்கும் பயன்படுத்தப்படுவதாகவும் குடிப்பதற்கு கேன் வாட்டர் வாங்கப்படுவதாகவும் அவர்கள் கூறுகின்றனர். சில தொகுப்புகளில் கழிவுநீர் குழாய்களில் இருந்து நீர் கசிவதை எங்களின் ஆய்வு குழு கண்டுள்ளது.

**ரேஷன் கடைகள்:**

பெரும்பாக்கம் மறுகுடியமர்வு பகுதிக்கென்று பிரத்யேகமாக ரேஷன் கடை செயல்பாட்டில் இல்லை. 3 ரேஷன் கடைகளுக்கான கட்டுமானம் நிறைவடைந்திருப்பினும் அவை திறக்கப்படாமல் உள்ளன. எனவே மக்கள் செம்மஞ்சேரியில் உள்ள ரேஷன் கடைகளையே பயன்படுத்தும் கட்டாயத்திற்கு தள்ளப்பட்டுள்ளனர்.

**மருத்துவமனைகள் மற்றும் மருத்துவ வசதிகள்:**

மறுகுடியமர்வு பகுதியில் பொது மருத்துவமனை, ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் எந்த மருத்துவ சேவையும் வழங்கப்படவில்லை. அருகாமையிலுள்ள மற்றுமொரு மறுகுடியமர்வு பகுதியான செம்மஞ்சேரியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்கனவே 6734 குடும்பங்களுக்கு வழங்கிவரும் நிலையில் இவர்களும் அதையே பயன்படுத்த வேண்டிய கட்டாய நிலையுள்ளது

**பள்ளிகள் மற்றும் அங்கன்வாடிகள்:**

பெரும்பாக்கம் மறுகுடியமர்வு பகுதியில் ஒரு அரசு மேல்நிலைப் பள்ளியும், இரண்டு அங்கன்வாடிகளும் துவக்கப்பட்டுள்ளன. ஆயினும் இதற்கென்று பிரத்தியேக கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படாததால் குடியிருப்புகளின் அடித்தளங்களில் அமைந்துள்ள தொகுப்பு வீடுகளின் அறைகளே வகுப்பறைகளாக பயன்படுத்தப்படுகின்றன.

இந்த ஆரம்பகட்ட விசாரணையின் மூலம் மறுகுடியமர்வு பகுதியான பெரும்பாக்கத்தில் அரசினால் வழங்கப்பட்ட கட்டமைப்பு வசதிகள் போதுமானதாக இல்லை என்பது தெளிவாகிறது. இங்கு வசிப்பவர்களுக்கு கல்வி மற்றும் மருத்துவ சேவை எதுவும் அருகாமையில் இல்லை. மாதாந்திர ரேஷன் கடை சேவை பெறுவதற்கு கூட செம்மஞ்சேரிக்கு செல்லவேண்டியுள்ளது. மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் ஏதும் வழங்கப்படாத நிலையிலும், மாதத்திற்கு ரூ.750 பராமரிப்புக்காக தமிழ்நாடு குடிசைமாற்று வாரியத்தின் மூலமாகவும், மாதத்திற்கு ரூ.50 குடியிருப்போர் நலச்சங்கம் மூலமாகவும் வசூலிக்கப்படுகிறது.